www.Padasalai.Net www.TrbTnpsc.com

T **இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023**

**ஒன்பதாம் வகுப்பு**

பதிவு எண்: [redacted]

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

## பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 7×1=7

1. பொருத்தமான விடையைத் தேர்க:

அ) சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
இ) சீவக சிந்தாமணி - 3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்

க) அ - 3, ஆ - 4, இ - 1, ஈ - 2 உ) அ - 2, ஆ - 3, இ - 1, ஈ - 4
ங) அ - 3, ஆ - 1, இ - 4, ஈ - 2 ச) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 3

2. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

அ) சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?
இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!
ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

3. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத் தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

4. "பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி ............

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

5. மரவேர் என்பது ............... புணர்ச்சி.

அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

6. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

7. 'குடும்ப விளக்கு' நூலை எழுதியவர் .............

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) வைரமுத்து

## பகுதி - II

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
(14 ஆவது வினா கட்டாய வினா) 5×2=10

8. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?
9. நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?
10. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
11. நடுகல் என்றால் என்ன?
12. இசைத்தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?
13. இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக்குறிப்புத் தருக.
14. 'தலை' என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


## பகுதி - III

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.
(18 ஆவது வினா கட்டாய வினா) 3×3=9

15. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.
16. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.
17. கைபிடி, கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும், அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.
18. "பூவாது காய்க்கும்" - எனத்தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

## பகுதி - IV

IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3×2=6

19. *பிழை நீக்கி எழுதுக :*
அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம் ஆ) பவளவிழிதான் பரிசு உரியவள்
20. கலைச்சொல் தருக : அ) Volunteer ஆ) Sentence
21. *மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க :*
அ) எட்டாக்கனி ஆ) எடுப்பார் கைப்பிள்ளை
22. *மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:*
அ) நேற்று தென்றல் காற்று அடித்தது ஆ) அணில் பழம் சாப்பிட்டது

## பகுதி - V

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 2×5=10

23. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?
24. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.
25. மாணவர்களாகிய உங்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்புகளை ஐந்து வரிகளில் எழுதுக.

## பகுதி - VI

VI. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடை தருக. 1×8=8

26. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.
27. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

----------

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com